DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜலிங்கம் | Taluk | |
| Father's Name | வைத்தியலிங்கம் | Village | |
| Age | 40 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **24.03.2026.** | | | |

(Accused 1, 2, 3 and 5 present, A4 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி வைத்தியலிங்கம், ஆனந்தன் முறையே எனது அப்பா, தம்பி ஆவார்கள். பட்டியல் சாட்சி மணிசேகர் எனது சித்தி மகனின் மகன். பட்டியல் சாட்சிகள் சிவபாலன், சுப்ரமணியன், வீரசெல்வன் ஆகியோர்களையும், ஆஜர் எதிரிகளையும், ஆஜரில்லா எதிரியையும் தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் இரவு வேளையில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எங்கள் தெருவில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டு, நான் வெளியே சென்று பார்த்தபோது, கும்பலில் இருந்த யாரோ சிலர் என்னை அசிங்கமாக திட்டி, என்னை தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், என்னை அசிங்கமாக திட்டி, தாக்கிய நபர்கள் யார் என்றும், எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி அடிப்பட்ட நான் முதலில் பண்ருட்டி அரசு மருத்துவமனையிலும், பின்னிட்டு கடலூர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை மேற்கொண்டேன். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசார் அங்கு வந்து என்னிடம் எழுதாத ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்தான் அது. **(மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இதை தவிர எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் நான் பேர்பெரியான்குப்பம், மதுபானக்கடையில் எங்கள் ஊரைச் சேர்ந்த சிவசண்முகம் என்பவரது பாரில் வேலை செய்து வந்த நிலையில், கடந்த 29.04.2024 அன்று இரவு சுமார் 9.40 மணியளவில் நான் மேற்படி பாரில் வேலை செய்துக் கொண்டிருந்தபோது அங்கு அருள்முருகன், ஜெயக்குமார் ஆகியோர்கள் வந்தார்கள் என்றும், அப்போது அருள்முருகன் என்னை அசிங்கமாக திட்டி, என் பெயரில் உள்ள பார் நான் தான் சிவசண்முகத்திடம், இங்கு பார் நடத்தக்கூடாது என்று சொன்னேன், பிறகு எதற்கு இங்கு வேலை செய்கிறாய் என்று கூறி, என்னை அடித்தார் என்றும், அப்போது நான் வேலை தானே செய்கிறேன் என்று கூறியதற்கு அவர் மீண்டும் என்னை அடித்தார் என்றும், அப்போது அங்கு இருந்தவர்கள் அருள்முருகனை விலக்கி என்னை காப்பாற்றிய பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்ட நிலையில், கடந்த 30.04.2024 அன்று இரவு சுமார் 8.40 மணியளவில், நான், என் மனைவி பானுப்பிரியாவிடம் மது அருந்தபோகிறேன் என்று சொல்லி, பணம் வாங்கிக்கொண்டு, மேற்சொன்ன மதுப்பானக்கடைக்கு இரவு 9.00 மணியளவில் சென்றபோது, வீரச்செல்வன் குடிக்க வந்தார் என்றும், அப்போது அருள்முருகன், ஜெயக்குமாருடன் அங்கு வந்து என்னிடம் நாம் மூவரும் வெளியில் சென்று, மது அருந்தலாம் என கூறி, இருசக்கர வாகனத்தில் ஏற சொன்னபோது, நான், எனது வாகனத்தில் வருகிறேன் என்று சொன்னதற்கு, அருள்முருகன் நான் உனது வண்டியை ஓட்டிக்கொண்டு வருகிறேன், நீ ஜெயக்குமாரின் வண்டியில் ஏறு என்று கூறியதால், நான் ஜெயக்குமாரின் வண்டியில் ஏறிக்கொண்டேன் என்றும், அவர்கள் என்னை இரவு சுமார் 9.15 மணியளவில் வல்லம் ஏரிக்கரை அருகே காலனி செல்லும் வழியில் உள்ள ஒரு மாமரத்தின் அருகே அழைத்துச்சென்றார்கள் என்றும், நான் மேற்படி வண்டியிலிருந்து இறங்கினேன் என்றும், அப்போது பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் 2 இருசக்கர வாகனத்தில் அங்கு வந்தார்கள் என்றும், அருள்முருகன் என்னை அசிங்கமாக திட்டி கையால், என் முகத்தில் மாறி மாறி குத்தினார் என்றும், ஜெயக்குமார், குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து என்னை அசிங்கமாக திட்டி, கையால் அடித்தும், காலால் உதைத்தும், என் காலை பிடித்து, தரையில் இழுத்து மீண்டும் அவர்களது வண்டியில் என்னை ஏற்றினார்கள் என்றும், மேற்படி சம்பவம் அங்கிருந்த சிவபாலன் என்பவருக்கு தெரியும் என்றும், பின்னிட்டு, என்னை அங்கிருந்து பேர்பெரியான்குப்பம் ஜெயச்சித்ரா பெட்ரோல் பங்க் அருகே உள்ள இரங்கநான் என்பவரது முந்திரி தோப்பு அருகில், இரவு சுமார் 9.45 மணியளவில், என் வண்டியுடன் என்னை இறக்கிபோட்டுவிட்டு, மேற்சொன்ன

ஐவரும் என்னை முந்திரிக்கட்டையை காட்டி அசிங்கமாக திட்டி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், அப்போது அங்கிருந்த சுப்ரமணியன் விலக்கிவிட்டார் என்றும், எதிரிகள் என்னை அடித்ததில் எனக்கு காயம் ஏற்பட்டு, மயக்கத்தில் கிடந்தபோது, சுப்ரமணியன் என் அப்பாவிற்கு தகவல் சொல்லி, என் அப்பா வைத்தியலிங்கம், தம்பி ஆனந்தன், சித்தி மகனின் மகனான மணிசேகர் ஆகியோர்கள் என்னை பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் என்றும், பின்னிட்டு, கடலூர் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றேன் என்றும், நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசாரிடம், மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : LW4/PW2

| Name | வீரசெல்வன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | குணசேகரன் | Village | |
| Age | 24 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **24.03.2026.** | | | |

(Accused 1, 2, 3 and 5 present, A4 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**
நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா–1 ராஜலிங்கம், பட்டியல் சாட்சிகள் வைத்தியலிங்கம், ஆனந்தன், மணிசேகர், சிவபாலன், சுப்ரமணியன் ஆகியோர்களையும், ஆஜர் எதிரிகளையும், ஆஜரில்லா எதிரியையும் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**
வழக்கின் எதிரிகள் பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 30.04.2024 அன்று இரவு சுமார் 9.00 மணியளவில் நான் பேர்பெரியான்குப்பம், மதுபானக்கடைக்கு சென்றபோது, அங்கு எங்கள் ஊரைச் சேர்ந்த சிவசண்முகம் என்பவரது பாரில், இராஜலிங்கம் வேலை செய்து வந்த நிலையில், கடந்த 29.04.2024 அன்று இரவு சுமார் 9.40 மணியளவில், ராஜலிங்கம் மேற்படி பாரில் வேலை செய்துக் கொண்டிருந்தபோது அங்கு அருள்முருகன், ஜெயக்குமார் ஆகியோர்கள் வந்தார்கள் என்றும், அப்போது அருள்முருகன் ராஜலிங்கத்தை அசிங்கமாக திட்டி, என் பெயரில் உள்ள பார் நான் தான் சிவசண்முகத்திடம், இங்கு பார் நடத்தக்கூடாது என்று சொன்னேன், பிறகு எதற்கு இங்கு வேலை செய்கிறாய் என்று கூறி, அவரை அடித்தார் என்றும், அப்போது ராஜலிங்கம் நான் இங்கு வேலை தானே செய்கிறேன் என்று கூறியதற்கு அவர் மீண்டும் ராஜலிங்கத்தை அடித்தார் என்றும், அப்போது அங்கு இருந்தவர்கள் அருள்முருகனை விலக்கி ராஜலிங்கத்தை காப்பாற்றியதாக கேள்விப்பட்டேன் என்றும், இந்நிலையில், கடந்த 30.04.2024 அன்று, மேற்சொன்ன

மதுப்பானக்கடைக்கு வந்தபோது, அப்போது அருள்முருகன், ஜெயக்குமாருடன் அங்கு வந்து இராஜலிங்கத்திடம் நாம் மூவரும் வெளியில் சென்று, மது அருந்தலாம் என கூறி, இருசக்கர வாகனத்தில் ஏற சொன்னபோது, இராஜலிங்கம், அவரது வாகனத்தில் வருகிறேன் என்று சொன்னதற்கு, அருள்முருகன் நான் உனது வண்டியை ஓட்டிக்கொண்டு வருகிறேன், நீ ஜெயக்குமாரின் வண்டியில் ஏறு என்று கூறியதால், ராஜலிங்கம், ஜெயக்குமாரின் வண்டியில் ஏறிக்கொண்டு சென்றார் என்றும், பிறகு இராஜலிங்கத்தை, அருள்முருகன், ஜெயராஜ், பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் அசிங்கமாக திட்டி கையால் அடித்தும், காலால் உதைத்தும், கட்டையை காட்டி மிரட்டிவிட்டு சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால், அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : LW5/PW3

| | | | |
|---|---|---|---|
| Name | வைத்தியலிங்கம் | Taluk | |
| Father's Name | மகாலிங்கம் | Village | |
| Age | 61 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **24.03.2026.** | | | |

(Accused 1, 2, 3 and 5 present, A4 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**
நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா–1, பட்டியல் சாட்சி ஆனந்தன் எனது மகன்கள். பட்டியல் சாட்சி மணிசேகர் எனது கொழுந்தியா மகனின் மகன். அ.சா–2 மற்றும் பட்டியல் சாட்சிகள் சிவபாலன், சுப்ரமணியன் ஆகியோர்களையும், ஆஜர் எதிரிகளையும், ஆஜரில்லா எதிரியையும் தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் இரவு வேளையில் என் மகன் எங்கள் வீட்டில் இருந்தபோது, எங்கள் தெருவில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டு, என் மகன் வெளியே சென்று பார்த்தபோது, கும்பலில் இருந்த யாரோ சிலர் என் மகனை அசிங்கமாக திட்டி, தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், என் மகனை அசிங்கமாக திட்டி, தாக்கிய நபர்கள் யார் என்றும், எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி அடிப்பட்ட என் மகனை, நான் முதலில் பண்ருட்டி அரசு மருத்துவமனையிலும், பின்னிட்டு கடலூர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சையில் சேர்த்தேன். இதை தவிர இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் என் மகன் ராஜலிங்கம் பேர்பெரியான்குப்பம், மதுபானக்கடையில் எங்கள் ஊரைச் சேர்ந்த சிவசண்முகம் என்பவரது பாரில் வேலை செய்து வந்த நிலையில், கடந்த 29.04.2024 அன்று இரவு சுமார் 9.40 மணியளவில் என் மகன்

ராஜலிங்கம் மேற்படி பாரில் வேலை செய்துக் கொண்டிருந்தபோது அங்கு அருள்முருகன், ஜெயக்குமார் ஆகியோர்கள் வந்தார்கள் என்றும், அப்போது அருள்முருகன் என் மகனை அசிங்கமாக திட்டி, என் பெயரில் உள்ள பார் நான் தான் சிவசண்முகத்திடம், இங்கு பார் நடத்தக்கூடாது என்று சொன்னேன், பிறகு எதற்கு இங்கு வேலை செய்கிறாய் என்று கூறி, என் மகன் ராஜலிங்கத்தை அடித்தார் என்றும், அப்போது என் மகன், நான் இங்கு வேலை தானே செய்கிறேன் என்று கூறியதற்கு அவர் மீண்டும் என் மகனை அடித்தார் என்றும், அப்போது அங்கு இருந்தவர்கள் அருள்முருகனை விலக்கி என் மகனை காப்பாற்றிய பின்னர் என் மகன் வீட்டிற்கு வந்துவிட்ட நிலையில், கடந்த 30.04.2024 அன்று இரவு சுமார் 8.40 மணியளவில், என் மகன், அவரது மனைவி பானுப்பிரியாவிடம் மது அருந்தபோகிறேன் என்று சொல்லி, பணம் வாங்கிக்கொண்டு, மேற்சொன்ன மதுப்பானக்கடைக்கு இரவு 9.00 மணியளவில் சென்றபோது, வீரச்செல்வன் குடிக்க வந்தார் என்றும், அப்போது அருள்முருகன், ஜெயக்குமாருடன் அங்கு வந்து என் மகனிடம் நாம் மூவரும் வெளியில் சென்று, மது அருந்தலாம் என கூறி, இருசக்கர வாகனத்தில் ஏற சொன்னபோது, என் மகன், அவரது வாகனத்தில் வருகிறேன் என்று சொன்னதற்கு, அருள்முருகன் நான் உனது வண்டியை ஓட்டிக்கொண்டு வருகிறேன், நீ ஜெயக்குமாரின் வண்டியில் ஏறு என்று கூறியதால், என் மகன், ஜெயக்குமாரின் வண்டியில் ஏறிக்கொண்டார் என்றும், அவர்கள் என் மகனை இரவு சுமார் 9.15 மணியளவில் வல்லம் ஏரிக்கரை அருகே காலனி செல்லும் வழியில் உள்ள ஒரு மாமரத்தின் அருகே அழைத்துச்சென்றார்கள் என்றும், என் மகன் மேற்படி வண்டியிலிருந்து இறங்கினார் என்றும், அப்போது பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் 2 இருசக்கர வாகனத்தில் அங்கு வந்தார்கள் என்றும், அருள்முருகன் என் மகனை அசிங்கமாக திட்டி கையால், என் மகனின் முகத்தில் மாறி மாறி குத்தினார் என்றும், ஜெயக்குமார், குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து என் மகனை அசிங்கமாக திட்டி, கையால் அடித்தும், காலால் உதைத்தும், அவரது காலை பிடித்து, தரையில் இழுத்து மீண்டும் அவர்களது வண்டியில் என் மகனை ஏற்றினார்கள் என்றும், மேற்படி சம்பவம் அங்கிருந்த சிவபாலன் என்பவருக்கு தெரியும் என்றும், பின்னிட்டு, என் மகனை அங்கிருந்து பேர்பெரியான்குப்பம் ஜெயச்சித்ரா பெட்ரோல் பங்க் அருகே உள்ள இரங்கநான் என்பவரது முந்திரி தோப்பு அருகில், இரவு சுமார் 9.45 மணியளவில், வண்டியுடன் என் மகனை இறக்கிபோட்டுவிட்டு, மேற்சொன்ன ஐவரும் என் மகனை முந்திரிக்கட்டையை காட்டி அசிங்கமாக திட்டி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், அப்போது அங்கிருந்த சுப்ரமணியன் விலக்கிவிட்டார் என்றும், எதிரிகள் என் மகனை அடித்ததில் என் மகனுக்கு காயம் ஏற்பட்டு, மயக்கத்தில் கிடந்தபோது, சுப்ரமணியன் எனக்கு தகவல் சொல்லி, நானும், எனது மகன் ஆனந்தன், கொழுந்தியாவின் மகனின் மகனான மணிசேகர் ஆகியோர்கள் மேற்படி இடத்திற்கு சென்று என் மகனை பார்த்துவிட்டு, அவரை முதலில் பண்ருட்டி அரசு மருத்துவமனையிலும், பின்னிட்டு, கடலூர் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சையிலும் சேர்த்தோம்

என்றும், என் மகன் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசாரிடம், மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுடன் நானும், எனது மகனும் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**